இராமநாதபுரம்நகர்மன்றத்தின்சாதாரணகூட்டம்நாள் :08.11.2023புதன்கிழமைகாலை10.30மணி

| வ.எண் | நகர்மன்றப்பொருள் | நகர்மன்றதீர்மானஎண்மற்றும்தீர்மானவிபரம் |
|---|---|---|
| 1 | **<u>நகர்மன்றத் தலைவர் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்</u>**<br>தமிழக அரசின் சார்பில் மகளிருக்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் மாதந்தோறும் மகளிர் உரிமை தொகை ரூ.1,000/- வழங்கி மகளிருக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்திய மாண்புமிகு தமிழக முதல்வர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, இந்நகர்மன்றம் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. | தீர்மான எண்-722<br>தீர்மான விபரம் -<br>மன்றம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| 2 | பொருள் 1<br>இராமநாதபுரம் நகராட்சி ஆணையாளர் அக்டோபர் 2023-க்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு - மன்றம் பதிவு செய்யலாம். | தீர்மான எண்-723<br>தீர்மான விபரம் - பதிவு செய்யப்பட்டது. |
| 3 | பொருள் 2<br>இராமநாதபுரம் நகராட்சி பொறியாளர் அக்டோபர்2023-க்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு - மன்றம் பதிவு செய்யலாம். | தீர்மான எண்-724<br>தீர்மான விபரம் - பதிவு செய்யப்பட்டது. |
| 4 | பொருள் 3<br>இராமநாதபுரம் நகராட்சியில் நுண் உரக்கூட மையத்திற்கு சலிக்கும் இயந்திரம் 1 எண்ணிக்கை வாங்கும் பணிக்கு ரூபாய்.0.89 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.663 நாள்:30.08.2023-ன் படி ஒப்புதல் அளித்துள்ளதன்படி மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 26.09.2023ல் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றன. | தீர்மான எண்-725<br>தீர்மான விபரம்<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| வ.எண் | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர்கள் | விலை விகிதம் கூடுதல்/குறைவு |
|---|---|---|
| 1. | திரு.எஸ்.முனியசாமி<br>ஒப்பந்ததாரர்<br>இராமநாதபுரம். | 0.28%சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | திரு.எம்.கார்த்திகேயன்<br>ஒப்பந்ததாரர்<br>இராமநாதபுரம். | 1.41%சதவீதம் மதிப்பீட்டை விட கூடுதல் |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் வழங்கியுள்ள திரு.எஸ்.முனியசாமி, ஒப்பந்ததாரர், இராமநாதபுரம் அவர்களது 0.28% மதிப்பீட்டை விட

<table>
<tr><td></td><td>குறைவினை ஏற்று மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்3091/2023/இ1</td><td></td></tr>
<tr><td>5</td><td>பொருள் 4<br>இராமநாதபுரம் நகராட்சியில் 1 முதல் 5 வகுப்பு வரை அரசுப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்திற்கு உணவளிப்பதற்கு கீழ்க்கண்ட விபரப்படி தட்டு டம்ளர் வாங்குவதற்கு உள்ளூர் நிறுவனத்தினரிடம் வாசுதேவன் மெட்டல்ஸ், இராமநாதபுரம் Gem Rate–ற்கு மிகாமல் வாங்குவதற்கும் கல்வி நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>பள்ளியின் பெயர்</th><th>தட்டுகள்</th><th>டம்ளர்கள்</th><th>ஜக்</th></tr>
<tr><td>1</td><td>வள்ளல் பாரி நகராட்சி நடுநிலைப்பள்ளி, வெளிப்பட்டிணம், இராமநாதபுரம்.</td><td>396</td><td>396</td><td>5</td></tr>
<tr><td>2</td><td>எம்.எஸ்.கே. நகராட்சி தொடக்கப்பள்ளி, வெளிப்பட்டிணம், இராமநாதபுரம்.</td><td>124</td><td>124</td><td>2</td></tr>
<tr><td>3</td><td>அறிஞர் அண்ணா நகராட்சி நடுநிலைப்பள்ளி, இராமநாதபுரம்.</td><td>180</td><td>180</td><td>3</td></tr>
<tr><td colspan="2">மொத்தம்</td><td>700</td><td>700</td><td>10</td></tr>
</table>
மேற்கண்ட பொருட்களை விநியோகம் செய்தமைக்கும் அதற்கான செலவினம் ரூ.1,03,200/–த்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு –1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)அவசர அவசியம் முன்னிட்டு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1173/2023/இ1</td><td>தீர்மான எண்–726<br>தீர்மான விபரம்<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>6</td><td>பொருள் 5<br>15வது மத்திய நிதிக்குழு மான்யம் – 2022–2023 ம் ஆண்டிற்கான Tied Grant ஒதுக்கீட்டின் கீழ் இராமநாதபுரம் நகராட்சிக்கு ரூ.5.20 இலட்சம் மதிப்பீட்டில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கான Desilting Machine ஒன்று வாங்கிட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் நிர்வாக அனுமதி (ந.க.எண்.18274/2022/CFC–1, நாள்.28.07.2023) வழங்கப்பட்டுள்ளது.</td><td>தீர்மான எண்–727<br>தீர்மான விபரம்<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | இந்நகராட்சியில் செயல்பாட்டில் உள்ள பாதாளசாக்கடை திட்டத்தில் உள்ள தொட்டிகளில் (Manhole) கடந்த காலங்களில் முறையான பராமரிப்பு இல்லாததால் தொட்டிகள் அனைத்திலும் கழிவுமண் படிந்துள்ளதால் கழிவுநீர் சரியாக செல்லமுடியாமல் நகரில் ஆங்காங்கே தொட்டிகளிலிருந்து உபரி கழிவுநீர் சாலையில் ஓடும் நிலை உள்ளது. அதனால் நகரில் பொதுமக்களுக்கு சுகாதாரக்கேடு ஏற்படும் வாய்ப்புள்ளது. அதனை தவிர்க்கும் பொருட்டு கழிவுமண் மூடியுள்ள தொட்டிகளில் Desilting செய்ய வேண்டியுள்ளதால் அதற்கான Desilting வாகனம் தேவைப்படுகிறது. எனவே மேற்கண்டவாறு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட வாகனத்திற்கு பதிலாக ரூ.18.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக ஒரு Desilting வாகனம் வாங்கிட அனுமதி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு 23.08.2023ல் உரிய வழிமுறையாக அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.<br>இந்நிலையில் நகரில் உள்ள பாதாள சாக்கடை குழிகளிலிருந்து அதிக இடங்களில் கழிவுநீர் கசிவு ஏற்படுவதாலும், விரைவில் பருவ மழைக்காலம் தொடங்க உள்ளதாலும் மேற்கண்ட தொட்டியில் உள்ள கழிவு மண்ணை உடனடியாக Desilting செய்து அப்புறப்படுத்த வேண்டியுள்ளது. எனவே நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதியை எதிர்நோக்கி, நகராட்சி பொதுநிதியிலிருந்து ரூ.18.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு Desilting வாகனம் வாங்கிட அனுமதி கோரி மன்றப் பொருள் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு –1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிமக்கலாம்.<br>ந.க.எண்.1056/2023/இ1 | |
| 7 | பொருள் 6<br>இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 01 முதல் 33 வார்டு வரையிலான சொத்து வரி, காலிமனை வரி, தொழில் வரி, பாதாள சாக்கடை கட்டணம், குத்தகை ஆகிய இனங்களை தீவிர வசூல் நடவடிக்கைகள் மேற்கொள்வது தொடர்பாகவும் உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023 பிரிவு 268–ன் படி 2023–2024 ஆம் இரண்டாம் அரையாண்டு சொத்து வரி செலுத்தினால் 5 சதவீதம் ஊக்கத்தொகை வழங்கப்படும் என்றும் மற்றும் 2023–2024 முதல் அரையாண்டு செலுத்தாதவர்களுக்கு 1 சதவீதம் அபராதம் சேர்த்து வசூல் செய்யப்படும் என பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்நகராட்சிக்குட்பட்ட வரி மற்றும் வரியில்லா இனங்களை ஆட்டோ வாகனம் மூலம் ஒலிபெருக்கி வழியாக விளம்பரம் செய்வதற்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள இந்நகர்மன்றம் (மன்ற தீர்மானம் எண்.712 நாள்.29.09.2023) அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து கீழ்க்காணும் விவரப்படி மூன்று நிறுவனங்களிலிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. | தீர்மான எண்–728<br>தீர்மான விபரம்<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><th>வ.எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>நாள் ஒன்றிற்கு ஆட்டோ மூலம் விளம்பரம் செய்வதற்கான தொகை (ரூ)</th></tr>
<tr><td>1</td><td>ஜெய் பப்ளிசிட்டீஸ்<br>85/2 ஜோதி காம்ப்ளக்ஸ்<br>தேவிபட்டிணம் மெயின் ரோடு, கேணிக்கரை, இராமநாதபுரம்</td><td>2000/-</td></tr>
<tr><td>2</td><td>ஜெகத் ஏஜென்ஸி<br>எண்.35, தங்கப்பா நகர், மாரியம்மன் கோவில் தெரு<br>இராமநாதபுரம்.</td><td>2150/-</td></tr>
<tr><td>3</td><td>சூர்யா பப்ளிசிட்டி அட்வர்டைசிங்<br>7/9 கோட்டைமேடு, கோழி கூட்டு தெரு,<br>இராமநாதபுரம்</td><td>2300/-</td></tr>
</table>
மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வ.எண்.1 ஜெய் பப்ளிசிட்டீஸ், 85/2 ஜோதி காம்ப்ளக்ஸ், தேவிபட்டிணம் மெயின் ரோடு, கேணிக்கரை, இராமநாதபுரம் நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். நகர் மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>
அலுவலக குறிப்பு -1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2)இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 01 முதல் 33 வார்டு வரையிலான சொத்து வரி, காலிமனை வரி, தொழில் வரி, பாதாள சாக்கடை கட்டணம், குத்தகை ஆகிய வரி மற்றும் வரியில்லா இனங்களை தீவிர வசூல் நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு அவசர தேவையினை கருதி இந்நகர் பொதுமக்களுக்கு ஆட்டோ மூலம் அறிவிப்பு செய்ய இந்நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>
3)இதற்கு ஆகும் செலவீன தொகையை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(கோப்பு எண்.732/2022/அ1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>8</td>
<td>பொருள் 7<br>
இராமநாதபுரம் நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் 2022-2023-ன் கீழ் அம்பேத்கார் நகர் தெருக்களில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு ரூபாய்.15.47 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களது கடித ந.க.எண்.8880/2023/தி2, நாள்.07.09.2023ன் படி ஒப்புதல் அளித்துள்ளதன் படி மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 04.10.2023ந் தேதி கோரப்பட்டதில் இரண்டு</td>
<td>தீர்மான எண்-729<br>தீர்மான விபரம் - அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | ஒப்பந்தப்புள்ளிகள் இணையதள வாயிலாக கீழ்க்கண்டவாறு வரப்பெற்றன.<br><br>**வ.எண்** / வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர்கள் / விலை விகிதம் கூடுதல்/குறைவு<br>1. திரு.எம்.கே.திருமுருகன் ஒப்பந்ததாரர் இராமநாதபுரம். — 0.15% சதவிகிதம் மதிப்பீட்டைவிட குறைவு<br>2. திருமதி.பி.நாகேஸ்வரி ஒப்பந்ததாரர் இராமநாதபுரம். — 7.42%சதவீதம் மதிப்பீட்டை விட கூடுதல்<br><br>மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் வழங்கியுள்ள திரு.எம்.கே.திருமுருகன், ஒப்பந்ததாரர், இராமநாதபுரம். அவர்களது 0.15% மதிப்பீட்டை விட குறைவினை ஏற்று மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு –1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்1258/2023/இ1 | |
| 9 | பொருள் 8<br>இராமநாதபுரம் நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் உள்ள சுத்திகரிப்பு நிலையம், பம்பிங் ஸ்டேசன், மற்றும் கழிவு நீர் செல்லும் குழாய்கள் ஆகியவற்றை இயக்குதல் மற்றும் பராமரிப்பு 2 மாதங்கள் மேற்கொள்ளும் பணிக்கு ரூபாய்.18.60 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.704 நாள்:29.09.2023–ன் படி ஒப்புதல் அளித்துள்ளதன்படி மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 04.10.2023ந் தேதி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் இணையதள வாயிலாக கீழ்க்கண்டவாறு வரப்பெற்றன.<br><br>**வ.எண்** / வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர்கள் / விலை விகிதம்<br>1. M/s Tamil Nadu Water Supply and Drainge System, Contractor. Namakkal. — மதிப்பீட்டை விட 0.06% குறைவு<br>2. JP Construction Contractor Namakkal. — மதிப்பீட்டை விட 0.05% அதிகம் | தீர்மான எண்–730<br>தீர்மான விபரம் –<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது. |

Nested tables:

| வ.எண் | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர்கள் | விலை விகிதம் கூடுதல்/குறைவு |
|---|---|---|
| 1. | திரு.எம்.கே.திருமுருகன் ஒப்பந்ததாரர் இராமநாதபுரம். | 0.15% சதவிகிதம் மதிப்பீட்டைவிட குறைவு |
| 2. | திருமதி.பி.நாகேஸ்வரி ஒப்பந்ததாரர் இராமநாதபுரம். | 7.42%சதவீதம் மதிப்பீட்டை விட கூடுதல் |

| வ.எண் | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர்கள் | விலை விகிதம் |
|---|---|---|
| 1. | M/s Tamil Nadu Water Supply and Drainge System, Contractor. Namakkal. | மதிப்பீட்டை விட 0.06% குறைவு |
| 2. | JP Construction Contractor Namakkal. | மதிப்பீட்டை விட 0.05% அதிகம் |

| | | |
|---|---|---|
| | மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் வழங்கியுள்ள " M/s Tamil Nadu Water Supply and Drainge System, Contractor, Namakkal." என்ற நிறுவனம் மதிப்பீட்டை விட 0.06% குறைவாக உள்ளதை ஏற்று மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – 1)மன்றம் அனுமதிக்கலாம்..<br>2)மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்3091/2023/இ1 | |
| 10 | பொருள் 9<br>இராமநாதபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட சாலைத் தெருவில் இந்தியன் வங்கி எதிரில் பாதாள சாக்கடை திட்ட பிரதான குழாயில் (350MM PSC Main Pipe ) உடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் வெளியேறி பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் மிகவும் இடையூறாக உள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் உடைந்துள்ள 350MM PSC Main பைப் பாதாள சாக்கடை பிரதான குழாயை அப்புறப்படுத்தி புதிதாக 350MM MS பைப் பொருத்தியமைக்க மதிப்பீடு ரூ.1.98 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – 1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)பாதாள சாக்கடை பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 3845/2023/இ1 | தீர்மான எண்–731<br>தீர்மான விபரம் –<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது. |
| 11 | பொருள் 10<br>இராமநாதபுரம் நகராட்சியின் 2021–2022ம் ஆண்டிற்கான தணிக்கை தடை தொடர்பாக வருவாய் மற்றும் மூலதனநிதி, குடிநீர் மற்றும் கல்வி நிதி ஆகியவற்றின் மொத்த பத்தி எண்ணிக்கை 66 தணிக்கை தடைபத்திகள் உள்ளன, மேற்படி தணிக்கை அறிக்கை மற்றும் தணிக்கை குறிப்புகள் ஜெராக்ஸ், பைண்டிங் செய்து கொடுத்த வகைக்கு ரூ.13,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு –மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்–732<br>தீர்மான விபரம் –<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது. |
| 12 | பொருள் 11<br>இராமநாதபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்–22ல் அகில் கிடங்கு தெரு குறுக்குத் தெருவில் உள்ள பாதாள சாக்கடை திட்ட கழிவுநீர் குழாயில் (350MM விட்டமுள்ள PSC பைப்) அடைப்பு ஏற்பட்டுள்ளதால் கழிவுநீர் ஆழ்நுழைவு வாயிற்புழை வழியாக சாலையில் வெளியேறி வருகிறது. எனவே மேற்கண்ட தெருவில் குறுக்கு சந்தில் உள்ள ஆழ்நுழைவு வாயிற்புழையிலிருந்து கூடுதலாக 150MM விட்டமுள்ள DWC பைப் 35 மீட்டர் நீளத்திற்கு பதித்தும் ஆழ்நுழைவு வாயிற்புழை புதிதாக அமைக்கவும் அருகாமையில் உள்ள பாதாள சாக்கடை ஆழ்நுழைவு வாயிற்புழையின் ஆழம் அதிகமாக உள்ள இடம் வரை மேற்படி பைப் பதிக்க | தீர்மான எண்–733<br>தீர்மான விபரம் –<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | மதிப்பீடு ரூ.90,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு -1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)2)பாதாள சாக்கடை பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.3847/2023/இ1 | |
| 13 | பொருள் 12<br>இராமநாதபுரம் நகராட்சியில் செயல்பாட்டில் உள்ள பாதாள சாக்கடை திட்டத்தில் பதிக்கப்பட்டுள்ள கழிவுநீர் குழாய்களில் அடைப்பு ஏற்படும் போது அதனை சரிசெய்வதற்காக இரண்டு Jed Rodding வாகனங்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேற்படி வாகனங்களில் TN65 5536 என்ற Jed Rodding வாகனத்தில் கழிவுநீர் குழாய் அடைப்பை சரிசெய்ய பயன்படுத்தப்படும் Jetting Hose-ன் நீளம் மிகவும் குறைவாகவும் மற்றும் Joint போடப்பட்டுள்ளதாலும் அதனை பயன்படுத்த இயலவில்லை. எனவே, மேற்படி Jetting Hose(3/4")400 அடி நீளத்திற்கு வாங்கிட ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.3.30 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு - 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) பாதாள சாக்கடை நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3)பாதாள சாக்கடை பணியின் அவசர அவசியம் முன்னிட்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.3649/2023/இ1 | தீர்மான எண்-734<br>தீர்மான விபரம்<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது. |
| 14 | பொருள் 13<br>இராமநாதபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்-19ல் சவேரியார் கோவில் தெரு சிகில் ராஜ வீதி சந்திப்பு அருகில் பாதாள சாக்கடை கழிவுநீர் குழாயில் அடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் சாலையில் தேங்கி நின்று சுகாதார கேடு விளைவிக்கும் நிலையில் உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதியும் பாதாள சாக்கடை திட்ட அவசியம் கருதியும் மேற்கண்ட குழாயை PSC Main Pipe -யை மாற்றி MS Pipe-யை பொருத்தும் பணிக்கு மதிப்பீடு ரூ.1.30 இலட்சத்துக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு - 1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)பாதாள சாக்கடை பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 3844/2023/இ1 | தீர்மான எண்-735<br>தீர்மான விபரம் -<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது. |
| 15 | பொருள் 14<br>இராமநாதபுரம் நகராட்சி பகுதிகளில் சுமார் 170 எண்ணம் இந்தியா மார்க்-II அடிபம்புகள் அமைக்கப்பட்டுள்ளதில் தற்பொழுது 130 எண்ணம் | தீர்மான எண்-736<br>தீர்மான விபரம்<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது. |

அடிபம்புகளில் தண்ணீர் பிடிக்கப்பட்டு பயன்பட்டு வருகிறது. அதில் தற்பொழுது குழாய் பொருத்துநரின் குறிப்பின்படி சுமார் 23 அடிபம்புகளில் தண்ணீர் இருந்தும் பயன்படுத்த இயலாமல் உள்ளது. மேலும் அடிபம்புகளில் ஸ்டாண்ட் உடைந்தும், Head Assembly, Water Tank,1¼" GI Pipe With Coupling மற்றும் Cylinder 12MM Connections rod போன்றவற்றை மாற்றியமைக்கவேண்டியுள்ளது. எனவே பொதுமக்களின் தண்ணீர் தேவையை கருத்திற் கொண்டு கீழ்க்கண்ட அடிபம்பு பராமரிப்பு பொருட்கள் வாங்குவதற்கும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.3.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பொருட்களின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | Stand | 10 எண்ணிக்கை |
| 2 | Water Tank | 10 எண்ணிக்கை |
| 3 | 1¼" GI Pipe With Coupling | 50 எண்ணிக்கை |
| 4 | Cylinder Assembly | 10 எண்ணிக்கை |
| 5 | 12MM Connecting rod | 20 எண்ணிக்கை |
| 6 | Head Assembly | 10 எண்ணிக்கை |
| 7 | Handle With Chain | 20 எண்ணிக்கை |

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண். 3802/2023/இ1

16

**பொருள் 15**

இராமநாதபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட சாலைத் தெருவில் ஸ்டேட் பேங்க் எதிரில் பாதாள சாக்கடை திட்ட பிரதான குழாயில் (350MM PSC Main) உடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் வெளியேறி பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் மிகவும் இடையூறாக உள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் உடைந்துள்ள 350MM PSC Main பைப் பாதாள சாக்கடை பிரதான குழாயை அப்புறப்படுத்தி புதிதாக 350MM MS பைப் பொருத்தியமைக்க மதிப்பீடு ரூ.1.95இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு –1) மன்றம் அனுமதிக்கலாம்.
2)பாதாள சாக்கடை பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண். 3843 /2023/இ1

தீர்மான எண்–737
தீர்மான விபரம்
அலுவலக குறிப்பு
அனுமதிக்கப்பட்டது.

17

**பொருள் 16**

இராமநாதபுரம் நகராட்சி பொறியியல் பிரிவு மற்றும் பொதுசுகாதாரப் பிரிவு ஆகியவற்றில் நீண்ட நாட்களாக உபயோகமற்ற நிலையிலும் மீண்டும் பயன்படுத்த முடியாத நிலையிலும் உள்ள கீழ்கண்ட பொருட்கள், பறிமுதல் செய்யப்பட்ட மின்மோட்டார்கள் மற்றும் தெருவிளக்கு சாமான்கள் நகராட்சி அலுவலக வளாகத்திலும்நகர்மன்ற கூடத்தின் மேற்கூரை கட்டிடத்திலும் மற்றும் லேத்தம்ஸ் பங்களா தெருவில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்

தீர்மான எண்–738
தீர்மான விபரம்
அலுவலக குறிப்பு
அனுமதிக்கப்பட்டது.

தொட்டி வளாகத்திலும் உள்ளன.

| வ.எண் | உபயோகமற்ற பொருட்களின் விபரம் | (பொறியியல் பிரிவு) |
|---|---|---|
| 1 | ஆயில் இன்ஜின் | 6 எண்ணம் |
| 2 | 7.5HP மோட்டார் | 3 எண்ணம் |
| 3 | 200 MM Non Return Valve | 2 எண்ணம் |
| 4 | 11/6 GI Pipe(10 அடி நீளம்) | 10 நீளம் |
| 5 | 25 KVA ஜெனரேட்டர் | 1 எண்ணம் |
| 6 | ½ H Motors(பறிமுதல் செய்யப்பட்டது) | 58 எண்ணம் |
| 7 | 200 MM CI Pipe | 20 அடி நீளம் |

| வ.எண் | உபயோகமற்ற பொருட்களின் விபரம் | (பொது சுகாதார பிரிவு) |
|---|---|---|
| 1 | மூன்று சக்கர வாகனங்கள் | 22 எண்ணம் |
| 2 | காம்பாக்டர் பின்கள் | 25 எண்ணம் |
| 3 | டம்பர் பிளேசர் பின்கள் | 15 எண்ணம் |
| 4 | தள்ளு வண்டிகள் | 1 எண்ணம் |
| 5 | Battery Operated Vechile | 26 எண்ணம் |
| 6 | சின்டெக்ஸ் டேங்க் | 2 எண்ணம் |
| 7 | பீரோ | 1 எண்ணம் |
| 8 | பிளாஸ்டிக் பின் | 2 எண்ணம் |
| 9 | அக்வா பில்டர் இயந்திரம் | 1 எண்ணம் |
| 10 | இருப்பு பைப்புகள்(10 அடி நீளம்) | 8 எண்ணம் |

மேற்கண்ட உபயோகத்திற்கு லாயகற்ற பொருட்களை பொது ஏலம் விடுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1)மன்றம் அனுமதிக்கலம்.

ந.க.எண். 3657/2023/இ1

| | | |
|---|---|---|
| 18 | பொருள் 17<br>இராமநாதபுரம் நகராட்சி, குடிநீர் விநியோகித்தல், இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் வழங்கப்பட்டு விநியோகிக்கப்படுகிறது. இவற்றில் குளோரினேசன் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் கலக்கப்படுவதில்லை.நகராட்சியால் கலக்கப்பட்டு விநியோகிக்கப்படுகிறது.தற்போது பராமரிப்பில் உள்ள தானியங்கி குளோரின் எந்திரம் பழுதடைந்து உள்ளது.மேலும் Liquid Chlorine Manually கலந்து விநியோகிக்கப்படுகிறது.தற்பொழுது மழை காலம் ஆரம்பமாகி விட்டதால், மேற்கண்ட தானியங்கி குளோரின் எந்திரத்தை பழுதுநீக்கம் செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டியுள்ளது.எனவே அதற்கான செலவினம் ரூ.1.20 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – 1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)இச்செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து பணிமேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்–739<br>தீர்மான விபரம்<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | ந.க.எண்.3752/2023/இ1 | |
| 19 | பொருள் 18<br>இராமநாதபுரம் நகராட்சியில் பாதாள சாக்கடை பராமரிப்பு பணியில் இயங்கி வரும் JED RODDING வாகனம் TN65L5922-ல் பின்புறம் உள்ள டயர்கள் முற்றிலும் தேய்ந்து உள்ளதால் வாகனத்தை இயக்குவதில் இடையூறாக உள்ளது. மேலும் ஏற்கனவே பொருத்தப்பட்ட டயர்கள் வாங்கி சுமார் 5 ஆண்டுகளுக்கு மேலாகியும் குறிப்பிட்ட கி.மீ நீளத்திற்கு வாகனம் இயக்கப்பட்டுள்ளது. எனவே பாதாள சாக்கடை பராமரிப்பின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட வாகனத்திற்கு 4 எண்ணம் டயர்கள் வாங்குவதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.56,000/-த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு - மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.3741/2023/இ1 | தீர்மான எண்-740<br>தீர்மான விபரம்<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| 20 | பொருள் 19<br>இராமநாதபுரம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் 06.11.2023 முதல் செயல்பாட்டில் இருந்து வருகிறது.இத்திட்டத்தின் கீழ் நகர் பகுதி 5 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.ஒவ்வொரு மண்டத்திலும் கழிவுநீர் குழாய்கள் மூலம் சேகரிக்கப்படும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு பம்பிங் செய்யப்படுகிறது.அதற்கென 5 மண்டலத்திலும் பம்பிங் ரூம் அமைக்கப்பட்டு உரிய அளவில் மின்மோட்டார்கள் பொருத்தப்பட்டு இயக்கப்படுகின்றன.மேலும், இரண்டு இடங்களில் கழிவுநீர் உந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.நகர் முழுவதும் சேகரிக்கப்படும் கழிவுநீர் இறுதியாக சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லப்படுகிறது. நகரிலிருந்து சுமார் 5.500 கி.மீ தொலைவில் கழுகூரணி என்ற கிராமத்தில் 2.50 ஏக்கர் பரப்பளவில் 7.00 எம்.எல்.டி கொள்ளளவு திறன் கொண்ட சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட கட்டமைப்புகள் அனைத்தும் 2013ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டு 06.11.2023 முதல் பயன்பாட்டில் இருந்து வருகிறது.<br>மேற்கண்ட பாதாள சாக்கடை திட்டத்தில் நகர் எல்லைக்குள் தற்போது வரை 12550 இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் நாள் ஒன்றுக்கு 6.50 எம்.எல்.டி கழிவுநீர் சேகரம் செய்யப்பட்டு சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லப்படுகிறது. இதன்படி இத்திட்டம் தற்போதைய நிலையில் திட்ட வடிவமைப்பு காலமான இறுதிநிலையினை (Ultimate Stage) அடைந்துள்ளது. மேலும், அனைத்து பம்ப் ரூம்கள் மற்றும் சுத்திகரிப்பு நிலையத்தில் மின்மோட்டார்கள் பொருத்தப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேல் ஆவதால் அவற்றின் இயங்கு திறன் (Efficiency) வெகுவாக குறைந்துள்ளது. அதனால் மின்மோட்டார்கள் அவ்வப்போது பழுதாகி நின்று வருகின்றன.<br>எனவே, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் செயல்பாடுகளை அதன் இறுதி நிலையின் (Ultimate Stage) கொள்ளளவை சுத்திகரிப்பு செய்திடும் வகையில் அங்குள்ள மின்மோட்டர்கள் மற்றும் பிற உபகரணங்களை மாற்றி | தீர்மான எண்-741<br>தீர்மான விபரம்<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr><td></td><td>புதுப்பித்திடவும் மற்றும் நகரில் அமைக்கப்பட்டுள்ள அனைத்து கழிவுநீர் பம்பிங் ஸ்டேசன்களில் பொருத்தப்பட்டுள்ள மின்மோட்டர்களை மாற்றி புதுப்பித்திடவும் மற்றும் புணரமைப்பு பணிகள் மேற்கொள்ளவும் தயார் செய்யப்பட்ட திட்ட மதிப்பீடு ரூ.640.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>மேலும், மேற்காணும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் பம்பிங் ஸ்டேசன் புணரமைப்பு பணிக்கான திட்ட மதிப்பீட்டிற்கு நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வழங்கிட கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு உரிய வழிமுறையாக கருத்துருக்களை அனுப்பி வைத்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.3807/2023/இ1</td><td></td></tr>
<tr><td>21</td><td>பொருள் 20<br>இராமநாதபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்–10ல் லெட்சுமிபுரம் ஊரணி தென்கரை பாதையில் பாதாள சாக்கடை திட்ட பிரதான குழாயில் (350MM PSC Main) உடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் சாலையில் வெளியேறி பொதுமக்களுக்கு மிகுந்த இடையூறு ஏற்பட்டு வருகிறது. எனவே பாதாள சாக்கடை திட்ட அவசியம் கருதி மேற்கண்ட இடத்தில் உடைந்துள்ள PSC பைப்பை அப்புறப்படுத்தி புதிதாக 350MM MS pipe பொருத்துவதற்கு மதிப்பீடு ரூ.1.98 இலட்சத்துக்குமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு –1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)பாதாள சாக்கடை பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.3846/2023/இ1</td><td>தீர்மான எண்–742<br>தீர்மான விபரம்<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>22</td><td>பொருள் 21<br>இராமநாதபுரம் நகராட்சி பராமரிப்பில் உள்ள Zone–II–ல் உள்ள சிங்காரத்தோப்பு பகுதியில் உள்ள கழிவுநீர் நீரேற்று நிலையம் அருகில் பாதாள சாக்கடை பிரதான குழாய்களில் உடைந்துள்ள பைப்புகளை அகற்றி புதியதாக 350MM விட்டமுள்ள MS Pipe Line பதிக்கும் பணிக்கு ரூ.7.45 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.719 நாள்:29.09.2023–ன் படி ஒப்புதல் அளித்துள்ளதன்படி மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 17.10.2023ல் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றன.<br><table><tr><td>வ.எ ண்</td><td>வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர்கள்</td><td>விலை விகிதம் கூடுதல்/குறைவு</td></tr><tr><td>1.</td><td>திரு.கே.சத்தியநாதன்<br>ஒப்பந்ததாரர்<br>இராமநாதபுரம்.</td><td>0.20%சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு</td></tr></table></td><td>தீர்மான எண்–743<br>தீர்மான விபரம்<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| வ.எண் | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர்கள் | விலை விகிதம் கூடுதல்/குறைவு |
|---|---|---|
| 2. | திரு.ஆர்.சரவணன்<br>ஒப்பந்ததாரர்<br>இராமநாதபுரம். | 3.55%சதவீதம் மதிப்பீட்டை விட கூடுதல் |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் வழங்கியுள்ள திரு.கே.சத்தியநாதன், ஒப்பந்ததாரர், இராமநாதபுரம் அவர்களது 0.20% மதிப்பீட்டை விட குறைவினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பாதாள சாக்கடை பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3396/2023/இ1

**23**

பொருள் 22

இராமநாதபுரம் நகராட்சி வார்டு எண்–1 கோட்டைமேடு இரண்டாவது குறுக்குத்தெரு, மூன்றாவது குறுக்குத் தெரு மற்றும் நான்காவது குறுக்குத் தெருக்களில் பாதாள சாக்கடை கட்டமைப்பு ஏற்படுத்தும் பணிக்கு ரூ.7.50லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.655 நாள்:30.08.2023–ன் படி ஒப்புதல் அளித்துள்ளதன்படி மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 17.10.2023ல் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றன.

| வ.எண் | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர்கள் | விலை விகிதம் கூடுதல்/குறைவு |
|---|---|---|
| 1. | திரு.எம்.கே.திருமுருகன்<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம். | 0.05%சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | திரு.பி.பி.மகேந்திரன்<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம். | 0.35%சதவீதம் மதிப்பீட்டை விட கூடுதல் |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் வழங்கியுள்ள திரு.எம்.கே.திருமுருகன், ஒப்பந்ததாரர், இராமநாதபுரம் அவர்களது 0.05% மதிப்பீட்டை விட குறைவினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2509/2023/இ1

தீர்மான எண்–744
தீர்மான விபரம்
அலுவலக குறிப்பு
அனுமதிக்கப்பட்டது.

**24**

பொருள் 23

இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12ல் வண்டிக்கார முருகையா சந்தில் உள்ள ஆழ்நுழைவு வாயிற்புழை முதல் கம்பர் தெருவில் உள்ள ஆழ்நுழைவு வாயிற்புழை வரை 160MM விட்டமுள்ள PVC பைப்

தீர்மான எண்–745
தீர்மான விபரம்
அலுவலக குறிப்பு
அனுமதிக்கப்பட்டது.

லைன் பதிக்கும் பணிக்கு ரூ.0.84லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.718 நாள்:29.09.2023–ன் படி ஒப்புதல் அளித்துள்ளதன்படி மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 17.10.2023ல் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றன.

| வ.எண் | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர்கள் | விலை விகிதம் கூடுதல்/குறைவு |
|---|---|---|
| 1. | திரு.கே.சத்தியநாதன்<br>ஒப்பந்ததாரர்<br>இராமநாதபுரம். | 0.04%சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | திரு.ஆர்.சரவணன்<br>ஒப்பந்ததாரர்<br>இராமநாதபுரம். | 1.39%சதவீதம் மதிப்பீட்டை விட கூடுதல் |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் வழங்கியுள்ள திரு.கே.சத்தியநாதன், ஒப்பந்ததாரர், இராமநாதபுரம் அவர்களது 0.04% மதிப்பீட்டை விட குறைவினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பாதாள சாக்கடை பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3395/2023/இ1

25

பொருள் 24

இராமநாதபுரம் நகராட்சி பழைய பேருந்து நிலையத்தின் உட்புறம் தாழ்வாக உள்ள இடத்தில் தொட்டி அமைத்து ஆயில் இன்ஜின் பொருத்தி அதற்கு உரிய 4' விட்டமுள்ள ஹோஸ் பைப் 150 அடி அளவில் வாங்கும் பணிக்கு ரூபாய்.1.65 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.698 நாள்.29.09.2023ன் படி ஒப்புதல் அளித்துள்ளதன் படி மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 17.10.2023ந் தேதி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றன.

| வ.எண் | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர்கள் | விலை விகிதம் கூடுதல்/குறைவு |
|---|---|---|
| 1. | திரு.ஆர்.சரவணன்<br>ஒப்பந்ததாரர்<br>இராமநாதபுரம். | 0.12% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | திரு.ஆர்.எஸ்.ராமமூர்த்தி<br>ஒப்பந்ததாரர்<br>இராமநாதபுரம். | 0.52 %சதவீதம் மதிப்பீட்டை விட கூடுதல் |

தீர்மான எண்–746
தீர்மான விபரம்
அலுவலக குறிப்பு
அனுமதிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| | மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் வழங்கியுள்ள திரு.ஆர்.சரவணன், ஒப்பந்ததாரர், இராமநாதபுரம். அவர்களது 0.12% மதிப்பீட்டை விட குறைவினை ஏற்று மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.3396/2023/இ1 | |
| 26 | பொருள் 25<br>இராமநாதபுரம் மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம் சி.சி.எண்.13/2022 வாதி திரு.ரஜினிகாந்த், என்பவர் தொடரப்பட்ட வழக்கிற்கு இந்நகராட்சி வழக்கறிஞர் திரு.என்.சரவணபாபு மேற்படி நீதிமன்றத்தில் ஆஜரான வகையில் வழக்கு கட்டணமாக ரூ.5000/–க்கான பில் பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி வழக்கிற்கான கட்டண தொகைரூ.5,000/–ஐ திரு.என்.சரவணபாபு வழக்கறிஞருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.<br>(கோப்பு எண்.4845/2018/அ2) | தீர்மான எண்–747<br>தீர்மான விபரம்<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது. |
| 27 | பொருள் 26<br>இராமநாதபுரம் நகராட்சி அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் (பழைய பேருந்து நிலையம்) முன்புறம் உள்ள ஏழு கடைகளும் பேருந்து நிலையம் மற்றும் சாலை விரிவாக்கத்திற்காக இடிக்கப்பட்டது. தற்போது மேற்காணும் அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் உள்ள ஏழு கடைகளில் தொடர்ந்து இந்நகராட்சிக்கு வாடகை செலுத்திய ஐந்து கடைகளுக்கு மட்டும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகளை தவிர்த்து இந்நகராட்சி நிர்ணயிக்கும் வாடகையை செலுத்த வேண்டும் என நிபந்தனைகளுடன் மேற்காணும் ஐந்து கடை உரிமையாளர்களுக்கு தற்காலிக இடம் ஒரு வருட காலத்திற்கு மட்டும் அமைத்து கொள்வதற்கு இந்நகர்மன்றம் அனுமதி அளித்துள்ளது (தீர்மான எண். 683 நாள்.30.08.2023) அதன் அடிப்படையில் அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் கடை நடத்தி வந்த திரு.எம்.பாஸ்கரன், திரு.கே.செல்வேந்திரன், திரு. அமீர் சுல்தான் , திரு. மஹ்துன் அலாவுதீன், திரு.எஸ். ஹபீப் ரஹ்மான் ஆயோருக்கு ஒரு வருட காலத்திற்கு மட்டும் தற்காலிகமாக கடை அமைத்து கொள்வதற்கான உத்தரவு வழங்கப்பட்டு இடத்திற்கான வாடகை வசூலிக்கப்பட்டு வருகிறது.எனவே ஏற்கனவே உள்ள மேற்காணும் ஐந்து கடைகளுக்கான கேட்பு தொகையை கீழ்க்காணும் விவரப்படி நீக்கம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | தீர்மான எண்–748<br>தீர்மான விபரம்<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr><td></td><td>
<u>அறிஞர் அண்ணா பேருந்து நிலைய கடைகள்</u>
<table>
<tr><th>வ. எ ண்</th><th>கடை விதிப்பு எண்</th><th>வாடகைதாரர் பெயர்</th><th>மாதம்</th><th>நீக்கம் செய்ய வேண்டிய தொகை</th></tr>
<tr><td>1</td><td>135/5002</td><td>திரு.எம். பாஸ்கரன்</td><td>2023-2024 மே</td><td>6110/-</td></tr>
<tr><td>2</td><td>135/5003</td><td>திரு.மஹதுன் அலாவுதீன்</td><td>2023-2024 மே</td><td>6110/-</td></tr>
<tr><td>3</td><td>135/5005</td><td>திரு.கே.செல்வேந்திரன்</td><td>2023-2024 மே</td><td>6110/-</td></tr>
<tr><td>4</td><td>135/5006</td><td>திரு.எஸ்.ஹபீப் ரஹ்மான்</td><td>2023-2024 மே</td><td>6110/-</td></tr>
<tr><td>5</td><td>135/5007</td><td>திரு.அமீர் சுல்தான்</td><td>2023-2024 மே</td><td>6110/-</td></tr>
<tr><td colspan="4">நீக்கம் செய்ய வேண்டிய மொத்த கேட்பு தொகை ரூ</td><td>30550/-</td></tr>
</table>
அலுவலக குறிப்பு- பட்டியலில் கண்டுள்ள ஐந்து கடை உரிமைதாரர்களுக்கும் தற்காலிகமாக இடம் வழங்கப்பட்டு அதற்கான வாடகை வசூலிக்கப்பட்டு வருவதால் மேற்படி ஐந்துகடைகளுக்கான ஏற்கனவே உள்ள வாடகை ரூ.30,550/- இந்நகராட்சி வரியில்லா இனம் கேட்பிலிருந்து நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br>(கோப்பு எண்.2896/2023/அ1)
</td><td></td></tr>
<tr><td>28</td><td>
பொருள் 27<br>
இந்நகராட்சிக்கு அலுவலக பயன்பாட்டிற்கு 2023-2024ம் ஆண்டிற்கு தேவையான பேப்பர், டோனர் மற்றும் கணிணி மைய ரசீதுகள் கட்டு உறை, வாங்குவதற்கு தமிழ்நாடு மல்டி பர்பஸ் அச்சக சேவை தொழில் கூட்டுறவு அச்சகம் ஆகிய நிறுவனத்தில் மற்றும் இராமநாதபுரம் மாவட்டம் அச்சக சேவை தொழில் கூட்டுறவு சங்கம் ஆகிய நிறுவனத்தில் வாங்கிக் கொள்ள தேவையான உத்தேச தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு - 1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2)மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண்.1822/2023/பி2
</td><td>தீர்மான எண்-749<br>தீர்மான விபரம்<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>29</td><td>
பொருள் 28<br>
